

දකුණු ආසියානු ගණකාධිකාරින් ගේ සම්මේලනයේ (SAFA) සම්මන්ත්‍රණය සහ තිළිණ ප්‍රදානෝත්සවයේදී ජනාධිපති ශ්‍රීමත් රණසිංහ ප්‍රේමදාස මැතිතුමා 1991 අගෝස්තු 09 වැනි සිකුරාදා, කොළඹ බණ්ඩාරනායක අනුස්මරණ ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලාවේදී පැවැත් වූ කථාව

கணக்கறிஞர்களின் தெற்காசியக் கூட்டவைக் கருத்தரங்கினதும் மானியவிருது வழங்கலினதும் அங்குரார்ப்பணக் கூட்டத்தின்போது அதிமேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஆற்றிய உரை — பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் — 1991 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

ADDRESS OF HIS EXCELLENCY RANASINGHE PREMADASA, PRESIDENT, AT THE INAUGURATION OF THE SOUTH ASIAN FEDERATION OF ACCOUNTANTS (SAFA) SEMINAR AND AWARDS PRESENTATION – FRIDAY, 9TH AUGUST 1991 – BMICH, COLOMBO

IBKT 0135
16/08/2023

## ජනාධිපති කාර්යාලය
## පුස්තකාලය

# දකුණු ආසියානු ගණකාධිකාරීන් ගේ සම්මේලනයේ (SAFA) සම්මන්ත්‍රණය සහ තිළිණ ප්‍රදානෝත්සවය පැවැති අවස්ථාවේ ජනාධිපති ශ්‍රීමත් රණසිංහ ප්‍රේමදාස මැතිතුමා 1991 අගෝස්තු 09 වැනි සිකුරාදා, කොළඹ බණ්ඩාරනායක අනුස්මරණ ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලාවේදී පැවැත් වූ කථාව

අද අපි මෙහි රැස්ව සිටින්නේ කරුණු දෙකක් නිමිති කොට ගෙනයි. ඉන් එකක් ආසියාතික ගණකාධිකාරිවරුන්ගේ සම්මේලන වාරය ආරම්භ කිරීමයි. අනික, අති විශිෂ්ට මණ්ඩල වාර්තාවටත් ගිණුම් ප්‍රකාශයටත් සම්මාන ප්‍රදානය කිරීමයි. බැලූ බැල්මට මේවා එකිනෙකට වෙනස් සිද්ධීන් දෙකක් හැටියට සලකන්න පුළුවනි. ඒ වුනත්, ඇත්ත වශයෙන්ම, ඒවාට විෂය වන්නේ පොදු පසුබිමක්. අපේ රටේත් අපේ කලාපයේත් සංවර්ධන ක්‍රියාවලියේදී ගණකාධිකාරිවරයකු සතු කාර්යභාරයට මේ කරුණු කෙළින්ම සම්බන්ධ වෙනවා.

අප කාගේත් සාකච්ඡාවට භාජන වී තිබෙන මේ සංවර්ධන ක්‍රියාවලිය කුමක් ද ? මේ සඳහා නොයෙක් ආකාරයේ අර්ථකථන ඉදිරිපත් කිරීමට පුළුවන්. අවශ්‍යතා අනුව එකිනෙකට වෙනස් නිර්වචනයන් ඉදිරිපත් කරන්නටත් පුළුවන්. අද අපගේ අවශ්‍යතා අනුව සලකන විට, සංවර්ධන ක්‍රියාවලිය අපේ ආර්ථිකයන් ප්‍රතිසංවිධාන කළ හැකි ක්‍රියා පද්ධතිය හැටියට හැඳින්වීමේ වරදක් නැහැ. ඒ ආර්ථිකයන් පරිපූර්ණ වෙළඳ ආර්ථිකයන් බවට අද පරිවර්තනය වෙමින් තියෙනවා. අද පවතින තත්ත්වය අනුව ඒවා තවම හැඳින්විය හැක්කේ අර්ධ වෙළඳ ආර්ථිකයන් වශයෙනුයි.

අපේ ආර්ථිකයන් අපේ පැරණි ඉතිහාසයේ උරුමයන් ලෙස සලකන්න පුළුවන්. ඇතැම් ඒවා අපට ලැබුණේ අපේ යටත් විජිත

අවධියේ ප්‍රතිඵල වශයෙනුයි. සමහරක් අපට ලැබුණේ ජාතික අරමුණු ඔස්සේ සිතීමේ ප්‍රතිඵලයක් වශයෙනුයි. තවත් සමහරකට බලපෑම් එල්ල වුණේ සීමාකරනවලිනුයි. සමහර ආර්ථිකයන්ට පදනම වුණේ ජනප්‍රිය වූත් සුහසාධනය මුල් කොට ගත්තා වූත් න්‍යායයන්.

වාසනාවකට මෙන් ලෝකය පුරාම සංවර්ධන ක්‍රියාවලිය පශ්චාත් – නූතන යුගයට පා තබා තියෙනවා. යටත් විජිතවාදී වෙළඳපළ ක්‍රමත් යටත් විජිතවාදී සම්බන්ධතාත් දැන් අතීතයේ නෂ්ටාවශේෂ බවට පත්වී අවසානයි. බටහිර ලෝකයත් නැගෙනහිර ලෝකයත් අතර සම්බන්ධතා තවදුරටත් ගැටුම් මත රඳාපවතින්නේ නැහැ. සීමාවන් ගෙන් බැඳී තිබුණු ආර්ථිකයන් බිඳ වැටීමත් සමගම නැගෙනහිර ලෝකයත් බටහිර ලෝකයත් අතර නව සම්බන්ධතා බිහි වෙන්න පටන් ගෙන තියෙනවා.

ශ්‍රී ලංකාවේ දැනට මතුවිගෙන එන්නේ එබඳු වෙළඳපළ ආර්ථිකයක්. ඒ ආර්ථිකයේ ඇතැම් ලක්ෂණ අපගේ සැලකිල්ලට ලක්විය යුතුයි. ඒ ක්‍රියාවලියට දුප්පතුන් ගැන මෙන්ම නැති බැරි අය ගැනත් අඩු වරප්‍රසාද ලත් අය ගැනත් සැලකිල්ල යොමුවී තිබෙන බව පැහැදිලි කරුණක්. එබඳු ආර්ථිකයකින් ඔවුන් අමතක කිරීමක් සිදු වෙන්නේ නැහැ. ඒ ජන කොටස් ඒ ක්‍රියාවලියේ ම කොටසක් වෙනවා. නිෂ්පාදන ක්‍රියාවලිය මෙහෙය වන වෙළඳපොළේ කොටසක් බවට ඒ පිරිස් පත් වෙනවා.

මේ ක්‍රියාවලිය අපි ජනසවිය යනුවෙන් හඳුන්වනවා. ඒ ක්‍රියාවලියට ආහාරය ලැබෙන්නේ ජනතාවගේ නිර්මාණශීලී කුශලතාවලිනුයි. අප ඒ සඳහා වැඩපිළිවෙළක් දියත් කොට තියෙනවා. ඒ සඳහා එක්තරා කාලසීමාවක් අප නියම කර තිබෙනවා. අප ඉන් බලාපොරොත්තු වන්නේ ඒ ක්‍රියාදාමයට සහායවීම වේගවත් කරන්නයි.

මෙයින් ඇතිවන පලවිපාක තමුන්නාන්සේලාට තේරේවි. එක් අතකින් බලන කොට, සමාජ – ආර්ථික යථාර්ථයන් ගේ ද්විත්ව ව්‍යූහය මේ මාර්ගයෙන් බිඳ වැටෙනවා. එවැනි ව්‍යූහයක් ඇතිවී තිබෙන්නේ අපට අපේ ආර්ථිකය කෙරෙහි බලපෑ යටත් විජිතවාදී සංකල්පයන් හේතුවෙනුයි. තවත් අතකින් බලන විට, අපේ සමාජයේ පවතින නොයෙකුත් අසමානකම් මා කලින් කියපු ක්‍රමය නිසා සමනය වෙනවා. අවසාන ප්‍රතිඵලය තමයි පහළ සිට ඉහළට නැගීමේ අවස්ථා සැම කෙනෙකුටම උදාවීම.

දැනට ඇතිවී ගෙන යන වෙළඳපළ ආර්ථිකයන්ගේ තවත් වැදගත් ලක්ෂණයක් තියෙනවා. ඒ තමයි ලෝක ආර්ථිකය සමඟ ඒවා ක්‍රමයෙන් සම්බන්ධවීම. අද ලෝක නිෂ්පාදන ක්‍රමයක් ක්‍රියාත්මක වෙනවා. එය ක්‍රියාත්මක කරවන්නේ භාණ්ඩ හා සේවා සඳහා වූ ලෝක වෙළඳපළක් විසිනුයි. අපේ දේශීය නිෂ්පාදන ක්‍රම ලෝකව්‍යාප්ත නිෂ්පාදන ක්‍රම හා සම්බන්ධ කිරීම අවශ්‍ය කරුණක්. අපි ඉන් මිලදී ගත යුතුවාක් මෙන්ම අපි එයට අලෙවි කළ යුතු ද වෙනවා. අපට කාර්යක්ෂම අන්දමින් නිෂ්පාදනය කළ නොහැකි භාණ්ඩ අප මිලදී ගත යුතුයි. එමෙන්ම, තුලනාත්මකව සලකා බලනවා නම්, අපට වාසිදායක හැටියට හැඟෙන අවස්ථාවලදී අපේ භාණ්ඩ අප ඊට විකිණිය යුතුයි.

ලෝක නිෂ්පාදන ක්‍රමයන් සමඟ එබඳු සම්බන්ධතාවක් ඇති කර ගැනීමට අප ශ්‍රී ලංකාවේ වෙළඳ නීති රීති බොහෝ දුරට ලිහිල් කර තිබෙනවා. අප දැන් ක්‍රමයෙන් විනිමය පාලනයත් ලිහිල් කරගෙන යනවා. ඇත්ත වශයෙන්ම, නීති රීති සියල්ලම ඉවත් කිරීම ගැනත් අපේ අවධානය දැඩි ලෙස යොමුවී තිබෙනවා. විදේශ ආයෝජනය සඳහා අප සෑම ධෛර්යයක්ම දෙනවා. අපි දැන් අනුගමනය කරන්නේ අපනයන මුල් කරගත් සංවර්ධන උපාය මාර්ගයක්. ඒ කාර්යයේ දී දේශීය නිෂ්පාදන ක්‍රියාවලිය නවීකරණය කිරීමට කටයුතු කරනවා ඇති.

තුන්වන ලක්ෂණය තමයි කලාපීය සහයෝගීතාව කෙරෙහි දක්වනු ලබන නැඹුරුව. මේ ආර්ථිකයන් වඩාත් විවෘත වූ තරමට කලාපීය සහයෝගීතාව සඳහා ඉඩකඩ වඩාත් පුළුල් වෙනවා. ඒ වගේම, ආර්ථිකයක් විවෘත වන තරමට කලාපීය සම්බන්ධතා පවා දැඩිවෙනවා. ආර්ථිකයක් ආවෘත වන තරමටත් සීමා බන්ධනවලට යටත් වන තරමටත් කලාපීය සම්බන්ධතා අඩු වෙනවා. වාසනාවකට වගේ සීමාකරණයට යටත් වුණු ක්‍රම සම්පාදන අත්හදබැලීම් අසාර්ථකවී ඇති බවට තුන්වන ලෝකයෙන් සාක්ෂි එමට ලැබී තිබෙනවා. අධික ජනගහනයකින් යුක්ත විශාල රටවල් පවා විවෘත නොවූ වෙළඳ ආර්ථිකයන් සාර්ථක කරගෙන නැහැ. මෙම තත්ත්ව යටතේ, කලාපීය ආර්ථික සහයෝගීතා වැඩිවීමේ ඉඩකඩ ඉතාම පැහැදිලියි.

මම මේ අදහස් තමුන්නාන්සේලා හමුවේ තැබුවේ වැදගත් හේතුවකටයි. එක අතකින් බලනකොට, ගණකාධිකාරී වෘත්තියේ

තියැලීමට සුදුසුම වාතාවරණයක් සැලසෙන්නේ වෙළඳ ආර්ථික ක්‍රමවලිනුයි. අප දන්නා විදිහට, සීමා පැනවුණු ආර්ථිකයන් සඳහා ගණකාධිකාරීන් එතරම් අවශ්‍ය වන්නේ නැහැ. අර්ධ වෙළඳ ආර්ථිකයන් මෙම වෘත්තියට සීමා බන්ධන පනවයි. ඒ වගේම මුලින් සඳහන් කළ පරිවර්තන ක්‍රියා දමයේ දී ගණකාධිකාරීන්ට විශේෂ කාර්ය භාරයක් ඉටු කරන්න සිදු වෙනවා. එවිට අභියෝග කිහිපයකට මුහුණ දෙන්න ඔවුන් සූදානම් වී සිටිය යුතුයි.

දුප්පත්කම තුරන් කරවීමේ උපාය මාර්ග හැටියට වෙළඳ ආර්ථිකයකට අවශ්‍ය වන එක් දෙයක් තමයි කුඩා ව්‍යාපාරික ආයතන වැඩි වැඩියෙන් දියුණු කරවීම. ඒ ව්‍යාපාර ආයතනවලට මූලික ගණකාධිකරණ මූලධර්ම තුලින් මග පෙන්වීමක් ලබා දිය යුතුයි. ලාභ අලාභ ප්‍රකාශයක්, ශේෂ පත්‍රයක් යනාදිය සකස් කර ගන්නා ආකාරය ඒ අය දැනගත යුතුයි. මූල්‍ය විනයක අවශ්‍යතාව ගැන ඒ අයට දැනුමක් තිබිය යුතුයි. මේ කුඩා ව්‍යාපාර ආයතන සඳහා පොදු සැලැස්මකුත් තිබිය යුතුයි. ඒවායේ විශාලත්වය අනුව ඒවායේ අවශ්‍යතාවල වැදගත්කමේ අඩුවක් ඇති වෙන්නේ නැහැ. මහා පරිමාණයේ ව්‍යාපාරවලට ඒවා ඒ අයිත් සමානයි.

මෙවැනි ව්‍යාපාර ආයතන ගණකාධිකරණ සංකල්ප මත ආරම්භ නොකළොත් ඒවාට තරඟකාරී වතාවරණයක දිගටම රැඳී සිටින්නට අපහසු වෙනවා. එවිට කුඩා ව්‍යාපාර හැටියට වර්ධනය වෙන්නත්, පසුව මධ්‍යම මට්ටමේ ව්‍යාපාර හැටියට වර්ධනය වෙන්නත් ඒවාට නොහැකි වනු නියතයි. ඒවාට තවත් ඉහළ යන්න නොහැකි වේවි.

ගණකාධිකාරී වෘත්තියට තිබෙන දෙවැනි අභියෝගය තමයි අපේ දේශීය ආර්ථිකය ලෝක ආර්ථිකය සමඟ ඒකාබද්ධ කිරීමේ අවශ්‍යතාව. පැහැදිලි වශයෙන්ම, මේ ගැන කල්පනා කරන කොට පෙනී යන්නේ වෘත්තියේ උසස් භාවය එලෙසින්ම පවත්වා ගෙන යැම වෘත්තියේ පළමු කාර්ය බවයි. වෘත්තිය තත්ත්වය ජාත්‍යන්තර මට්ටමට වඩා අඩු නොවිය යුතුයි. වෘත්තියේ ආචාර ධර්මත් නිවැරදි පිළිවෙතත් ඉහළ මට්ටමකින් තිබිය යුතුයි. ආචාර ධර්ම පද්ධතියක් වෘත්තිය තුළින්ම ක්‍රියාත්මක කළ යුතුයි. නොසැලකිලිමත් බව නොඉවසිය යුතුයි.

ජනාධිපති කාර්යාලය
**පුස්තකාලය**

තුන්වන අභියෝගය කලාපීය සහයෝගීතාවයි. එවැනි සහයෝගීතාවකින් කලාපයේ සමාජ–ආර්ථික සංවර්ධනය නංවාලීමට ගණකාධිකාරිවරුන්ට කළ හැක්කේ කුමක් ද? මේ ප්‍රශ්නයට පිළිතුරු තමුන්නාන්සේලාගේ සම්මන්ත්‍රණය ඔස්සේ සැපයෙනු ඇතැ යි මම විශ්වාස කරනවා.

වාසනාවකට, අපේ රටවල ප්‍රතිපත්ති සීඝ්‍ර වෙනසකට භාජනය වී තියෙනවා. අද රටවල් බොහොමයක් නිදහස් වූත් විවෘත වූත් වෙළඳපොළට වඩාත් නැඹුරු වෙමින් සිටින්නේ. දුප්පත්කමේ ප්‍රශ්නය විසඳීම සඳහා ගණකාධිකාරිවරුන්ට ප්‍රයෝජනවත් ලෙස මැදිහත් වෙන්න මෙයින් හොඳ වාතාවරණයක් සැපයෙනවා. මම මේ උත්සාහ කළේ ගණකාධිකාරිවරුන්ට ලංකාවේදී මෙය කළ හැක්කේ කෙසේ ද යන්න පෙන්වා දීමටයි. සමහර විට අපේ කලාපයේ විවිධ ගණකාධිකරණ වෘත්තීය සංවිධානවලට මේ සඳහා එක්වී ක්‍රියාකරන්න පුළුවන්කම තියෙනවා. ඔරොත්තුදීමේ ශක්තියක් ඇති වෙළඳ ආර්ථිකයක් තුළින් දුප්පත් ජනතාව නිෂ්පාදන කටයුතුවල යොදවන්නට නම් අපට ගණකාධිකාරීන්ගේ උපකාර ඉතා වැදගත් වෙනවා.

මේ සම්මන්ත්‍රණය විවෘත කරන්නට ලැබීම මට මහත් සතුටක්. දකුණු ආසියාතික ගණකාධිකාරීන්ගේ සම්මන්ත්‍රණය සෑම අයුරකින්ම සාර්ථක වේ වා යි මම ප්‍රාර්ථනය කරනවා.

ස්තුතියි.

கணக்கறிஞர்களின் தெற்காசியக் கூட்டவைக் கருத்தரங்கினதும் மானியவிருது வழங்கலினதும் அங்குரார்ப்பணக் கூட்டத்தின் போது அதிமேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஆற்றிய உரை — பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் — 1991 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

இரண்டு வைபவங்களைக் கொண்டாடுவதற்கு நாங்கள் இன்று இங்கே குழுமியுள்ளோம். கணக்கறிஞர்களின் தெற்காசியக் கூட்டவைக் கருத்தரங்கு அந்த இரண்டு வைபவங்களில் ஒன்றாகும். மிகச் சிறந்த கூட்டவை அறிக்கைக்கும் கணக்குகளுக்கும் மானிய விருதுகளை வழங்குதல் ஏனைய வைபவமாகும். மேல்வாரியாகப் பார்க்குமிடத்து இந்த வைபவங்கள் தனித்துவமான நிகழ்ச்சிகளாகத் தோன்றலாம். ஆனால், உண்மையில் அவ்விரு நிகழ்ச்சிகளும் ஒரே விடயத்தோடு தொடர்பு கொண்டவைகளாகும். இவ்விரண்டும் எமது நாட்டினதும் எமது பிராந்தியத்தினதும் அபிவிருத்திச் செயல்முறையோடு கணக்கறிஞர்கள் கொண்டுள்ள பாத்திரத்தை எடுத்தியம்புகின்றன.

நாங்கள் அனைவரும் ஆராய்கின்ற இந்த அபிவிருத்திச் செயல்முறை என்பது யாது ? அதற்குப் பல்வேறு பொருட்கோடல்களை வழங்கலாம். தேவைகளுக்கு ஏற்பப் பல்வேறு செயற்பாட்டு வரைவிலக்கணங்களையும் கூறலாம். இன்று நாங்கள் ஆராயும் நோக்கத்தின்படி எமது பொருளா தாரங்களைச் சார்ந்த மாற்றமுறும் செயல்முறையாக அது இருக்குமென நான் வரைவிலக்கணம் கூறுகின்றேன். இப் பொருளாதாரங்கள் எல்லாத் துறைகளாலும் அலங்கரிக்கப்பட்ட சந்தைப் பொருளாதாரங்களாக மாற்றப் பட்டு வருகின்றன. அவை, இன்றுள்ள நிலையில் அரைகுறையான சந்தைப் பொருளாதாரங்களாகவே இயங்கிவருகின்றன.

எமது பொருளாதாரங்கள் எமது பண்டைய சரித்திரத்தோடு பின்னிப்பிணைந்துள்ளன வாகும். அவற்றுட்சில எமது குடியேற்ற நாட்டுக் காலத்தில் தோற்றமெடுத்தவைகளாகும். வேறு சில தேசிய

பாரம்பரியத்தினால் உருவெடுத்தவைகளாகும். மேலும்சில ஏவல்மாதிரிகளின் செல்வாக்கினைக் கொண்டவைகளாகும். இன்னும் சில சனரஞ்சகமானதும் ஆக்கநல முடையதுமான கருத்தியல்வாதங்களால் உயிரூட்டப்பட்டவைகளாகும்.

நாங்கள் செய்த தவப்பயனாக, அகில உலகமும் அபிவிருத்தி சார்ந்த நவீனயுகத்தின் பின்னிகழ்வுக் கட்டத்தினை அடைந்துள்ளது. குடியேற்ற நாட்டுச் சந்தை முறைமைகளும் தங்கிவாழும் வர்த்தக உறவுகளும் மலையேறி விட்டன. இப்பொழுது வடக்கு, தெற்கு அரசியல் உறவுகள் மோதிக்கொண்டகாலம் கடந்துள்ளது. ஏவல்பாணிக்குட்பட்ட பொருளாதார முறைகள் செயலிழந்ததையடுத்து கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையில் புதிய உறவுகள் உருவாகி வருகின்றன.

அங்ஙனம் புதிதாக உருவாகி வருகின்ற சந்தைப்பொருளாதாரம் சார்ந்த இலங்கைக்குரிய சில சிறப்பியல்புகள் கவனிக்கத்தக்கவைகளாகும். அச் சிறப்பியல்புக் கூறுகளின்கீழ் வசதியில்லாதவர்களாயும் சிறப்புரிமைகள் அற்றவர்களாயும் உள்ள வறியமக்கள் சந்தைப் பொருளாதாரத்தின் இயக்கவிசை ஓட்டத்துக்கு இழுக்கப்பட்டுள்ளனர். அம்மக்கள் அத்தகைய பொருளாதார முறையின்கீழ் புறக்கணிக்கப்பட்டவர்களாக அல்லது கவனிக்கப்படாதவர்களாக இருக்கமாட்டார்கள். உற்பத்திச் செயல்முறையின் பங்காளிகளாக அவர்கள் திகழுவார்கள். உற்பத்திச் செயல்முறைக்கு ஆதாரமாகவுள்ள சந்தையில் பங்காளிகளாக அவர்கள் திகழுவார்கள்.

அந்தச் செயல்முறைக்கு சனசக்தி என்று நாங்கள் பெயரிட்டுள்ளோம். அந்நிகழ்ச்சித் திட்டம் எமது மக்களது படைப்பாற்றலைக்கொண்டு அமுலாக்கப்பட்டு வருகின்றது. அதற்கென நாங்கள் சிறப்புத் திட்டமொன்றை உருவாக்கியுள்ளோம். அத்திட்டத்துக்கு நாங்கள் காலக்கெடுவொன்றினையும் விதித்துள்ளோம். அதன்மூலம் உற்பத்திச் செயல்முறைக்கு ஆதரவு அளித்து அதனை வேகப்படுத்தக் கருதுகின்றோம்.

இதனால் ஏற்படப்போகின்ற மாற்றங்களை நீங்கள் கற்பனை செய்துபாருங்கள். முதலாவதாக, சமூகப் பொருளியல் உண்மையினைச் சார்ந்த இருமைக் கட்டமைப்பினை ஊடுருவிச் செல்லும் சக்தி இந்நிகழ்ச்சித் திட்டத்துக்கு உண்டு. அந்த இருமைக் கட்டமைப்பானது எமது பொருளாதாரத்தின்மீது குடியேற்ற நாட்டு கொள்கையினால்

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

ஏற்பட்டதொன்றாகும். இரண்டாவதாக, எமது சமுதாய ஒழுங்கில் உள்ள ஒப்புரவு இன்மைகளை அகற்றுவதற்கு இந்நிகழ்ச்சித் திட்டம் உதவுகின்றது. அப்பொழுது அபிவிருத்தி வளவாய்ப்புகள் ஏணியில் கீழிருந்து மேல்நோக்கிச் செல்லத்தொடங்கும்.

புதிதாக உருவாகி வருகின்ற சந்தைப் பொருளாதாரங்களின் இன்னொரு சிறப்பமிசம் என்னவென்றால் உலகப் பொருளாதாரத்துடன் முற்போக்கான முறையில் ஒன்றிணையக்கூடிய சிறப்பமிசமாகும். இன்று, உலக உற்பத்தி முறைமையொன்று இருக்கின்றது. அதற்கு ஆதார சக்தியாகப் பண்டங்களுக்கும் சேவைகளுக்கும் உறுதுணைபுரிகின்ற உலகச் சந்தையொன்று நிலவுகின்றது. உலகளாவிய முறைமையோடு எமது நாட்டுக்கே சிறப்பான உற்பத்தி முறைமைகளை ஒன்றிணைக்கும் அவசியம் எமக்கு ஏற்பட்டுள்ளது. அம்முறைமையிலிருந்து பண்டங்களைக் கொள்வனவு செய்யவும் அம்முறைமைக்கு எமது பண்டங்களை விற்கவும் வேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. திறமையாக நாங்கள் உற்பத்தி செய்யமுடியாத பொருள்களை அங்கிருந்து கொள்வளவு செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஒப்பீட்டு நலவசதியுடன் விற்பனைத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய பண்டங்களை நாங்கள் விற்பனை செய்யவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அத்தகைய ஒருங்கிணைப்பினை வேகப்படுத்துவதற்காக இலங்கையில் நாங்கள் வர்த்தகத் தொழிற்பாடுகளை தாராளமயப் படுத்தியுள்ளோம். நாங்கள் படிப்படியாக நாணயமாற்றுக் கட்டுப்பாடு களையும் நீக்கி வருகின்றோம். ஒழுங்குவிதிகளை முற்றுமுழுதாக அகற்றுவதற்கு தீவிரமாகக் கருதி வருகின்றோம். அந்நியநாட்டு முதலீடு களுக்கு ஊக்கம் அளித்தும் வருகின்றோம். ஏற்றுமதி நெறிப்பட்ட வளர்ச்சித் திறமுறையொன்றையும் நாங்கள் கடைப்பிடித்து வருகின் றோம். அதைச் செய்யும் பொழுது உள்நாட்டு உற்பத்தித்தளமும் நவீனமயப்படுத்தப்படும்.

பிராந்தியக் கூட்டுறவினை வளர்த்துக்கொள்ளும் போக்கு மூன்றாவது சிறப்பமிசமாகும். இயல்பாகவே அத்தகைய கூட்டுறவானது சந்தைநெறிப்பட்ட பொருளாதாரங்கள் உள்ள நாடுகளில் நன்றாக வளருகின்றது. இந்தப் பொருளாதாரங்கள் அதிக அளவில் திறந்த பொருளாதாரங்களாக அமையும்பொழுது பிராந்தியக் கூட்டுறவும் செழித்து வளருகின்றது. அவை நெருங்கிய தொடர்பு உள்ளவை

களாகவும் ஆகர்சணச்சக்தி உள்ளவைகளாகவும் அமையும்போது குறுகிய பிராந்தியப் போக்குகளுக்கு இடமில்லாமல் போய்விடும். ஏவல் பாணித் திட்டமிடல் விடயத்தில் மூன்றாவது உலகங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் பல தோல்வி கண்டிருப்பது இக்கருத்துக்கு ஆதாரமாக அமைந்துள்ளது. பெரிய மக்கள் தொகைகளைக் கொண்ட மிகப்பெரிய நாடுகளிலும் ஆகர்சணப்பாண்மைகொண்ட சந்தைப் பொருளியல் முறைகள் வெற்றிகரமாக இயங்கமுடியுமென்பது நிரூபிக்கப்படவில்லை. இந்தச் சூழலிலே பிராந்தியப் பொருளாதாரக் கூட்டுறவுக்கு நல்ல வருங்காலமுண்டு.

இக்கருத்துக்களை நல்ல காரணத்துடன்தான் நான் உங்கள் முன்வைத்தேன். கணக்கறிஞர்களின் தொழிலினை நடாத்துவதற்குச் சரியான பின்னணியாக சந்தைப் பொருளாதாரம் இருப்பது ஒரு காரணமாகும். எங்களுக்குத் தெரிந்தவரையில் ஏவல் பொருளாதாரங்கள் கணக்கறிஞர்களுக்கு அவ்வளவு உதவிபுரிவனவல்ல. அரைகுறையான சந்தைப் பொருளாதாரங்கள் கணக்கறிஞர் தொழிலைக் கட்டுப் படுத்துகின்றன. இன்னொரு காரணம் நான் இதுவரை விளக்கிய மாற்றத்தகவுடைய பொருளாதார முறையில் கணக்கறிஞர்களுக்கு முக்கியமான பாத்திரம் இருப்பதேயாகும். அச்செயல்முறையில் சவால் கள் சிலவற்றை எதிர்கொள்ளும்பொருட்டு கணக்கறிஞர்கள் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டியவர்களாக இருப்பர்.

சிறுதொழில் முயற்சிகளைத் தட்டியெழுப்புவது சந்தைப் பொருளா தாரமொன்றில் மேற்கொள்ளப்படவேண்டிய வறுமைத்தணிப்புத் திற முறைகளில் ஒன்றாகும். இத்தொழில் முயற்சிகள் கணக்கியல்சார்ந்த அடிப்படைக் கோட்பாடுகளால் வழிகாட்டப்படவேண்டுவனவாகும். ஐந் தொகைப் பத்திரமொன்றினையும் இலாப நட்டக் கணக்குக் கூற்றினையும் தயார்செய்வதுபற்றி அவர்கள் அறிந்திருத்தல் வேண்டும். அவர்கள் நிதிக்கட்டுப்பாட்டுத் தேவைகளையும் அறிந்திருத்தல் வேண்டும். அவர் களது தொழில் முயற்சிகளுக்குக் கம்பனித் திட்டமொன்று இருப்பதும் அவசியமாகும். இத்தேவைகள் பெரிய கூட்டவை அமைப்பாண்மைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தனவோ அவ்வளவுக்கு சிறிய தொழில் முயற்சிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும்.

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

அத்தகைய தொழிலுரிமைத்துவங்கள் கணக்கியல் கோட்பாடுகளின் கீழ் இயங்குவதற்கு ஆவனசெய்யாவிடின் போட்டிகரமான சூழலொன்றில் அவை நீடுநிலைப்பது கடினமாகும். அத்தொழில் உரிமைத்துவங்கள் சிறிய தாளாண்மைகளாக வளர்ந்து அதன் பின்னர் நடுத்தர தாளாண்மைகளாக வளரமுடியாதநிலையும் ஏற்படலாம். அவை செழிப்புற்று மேலும் விருத்தியடையும் வாய்ப்பும் இல்லாமல் போகலாம்.

எமது தேசிய பொருளாதாரத்தினை உலக பொருளாதாரத்துடன் ஒன்றிணைப்பது கணக்கறிஞர் தொழிற்றுறை எதிர்நோக்கியுள்ள இரண்டாவது சவாலாகும். இந்தக் கண்கொண்டு பார்க்குமிடத்து கணக்கறிஞர் தொழிற்றுறை தரம் உயர்த்தப்படுவது அதன் முதலாவது கடப்பாடாக உள்ளதென்பதைக் காணலாம். அதன் தொழிற்றுறை நியமங்கள் சர்வதேச நியமங்களைக் காட்டிலும் குறைந்த நியமங்களாக இருத்தலாகா. அதன் தொழில் ஒழுக்கநெறிகளும் மரபமைதிகளும் உயர்ந்த நிலையில் இருப்பது அவசியமாகும். கணக்கறிஞர் தொழிலாண்மையால் ஒழுக்கநெறிக்கோவையொன்று வலுக்கட்டாய நிலைக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும். கவனக்குறைக்கு இடங்கொடுத்தலாகாது.

பிராந்தியக் கூட்டுறவானது மூன்றாவது சவாலாகும். அத்தகைய கூட்டுறவின் வாயிலாக இப்பிராந்தியத்தின் சமூக பொருளியல் அபிவிருத்தியின் மேம்பாட்டுக்காக கணக்கறிஞர்கள் ஆற்றவேண்டிய பணிகள் யாவை ? இந்த வினாவுக்கு உங்கள் கருத்தரங்குக் கூட்டத்தில் விடைகளைக் காணுவீர்களென நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

நாம் செய்த தவத்தின் பயனாக, எமது நாடுகளிலுள்ள கொள்கைகள் தீவிர மாற்றத்துக்கு உட்பட்டு வருகின்றன. பல நாடுகள் அதிக தாராளமயமானதும், அதிக திறந்த வாய்ப்புகளைக் கொண்டதும், அதிக சந்தை வளவாய்ப்புகளைக் கொண்டதுமான முறைகளைத் தழுவி வருகின்றன. இதன் காரணமாக வறுமைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கணக்கறிஞர்கள் பயன்மிக்க முறையில் தமது பங்கினை ஆற்றக்கூடிய சாதகமான சூழல் ஏற்படுகின்றது. இப்பணியினை இலங்கையில் வாழுகின்ற கணக்கறிஞர்கள் எங்ஙனம் சாதிக்க முடியுமென்பதை சுருக்கமாகக் கூறுவதற்கு நான் முயன்றுள்ளேன். எமது பிராந்தியத்தைச் சேர்ந்த கணக்கறிஞர்களின் பல்வேறு தொழில்

நிறுவனங்களும் இப்பணியில் கணக்கறிஞர்களோடு ஒத்துழைக்கலாம். நிலைபேறுடைய வர்த்தகப் பொருளாதார முறையின்கீழ் எமது வறிய மக்கள் உற்பத்தியில் பங்குகொள்வதற்கு அந்த நிறுவனங்களின் ஒத்துழைப்பு பேருதவியாகும்.

உங்கள் கருத்தரங்கினை அங்குரார்ப்பணம் செய்துவைப்பதில் நான் பேருவகையடைகின்றேன். கணக்கறிஞர்களின் தெற்காசியக் கூட்டவைக் கருத்தரங்கு எல்லா வெற்றிகளையும் காணவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றி.

## ADDRESS OF HIS EXCELLENCY RANASINGHE PREMADASA, PRESIDENT, AT THE INAUGURATION OF THE SOUTH ASIAN FEDERATION OF ACCOUNTANTS (SAFA) SEMINAR AND AWARDS PRESENTATION – FRIDAY, 9TH AUGUST 1991 – BMICH, COLOMBO

We are gathered here today to mark two events. The inauguration of the South Asian Federation of Accountants' Seminar is one. The Presentation of Awards for the Most Outstanding Corporate Report and Accounts is the other. On the face of it, these are distinct events. In reality, they share common ground. It concerns the role of the Accountant in the development process of our nation and our region.

**What is this development process all of us are talking about? Different perceptions are possible. Depending on need different operational definitions are also possible. For our purposes today, I would call it the process by which our economies are being transformed. They are being transformed into fully fledged market economies. As they are today, they are market economies only partially.**

Our economies owe their lineage to our ancient history. Some come from our colonial past. Some were influenced by nationalist trends. Some were influenced by command models. Some owe their vitality to populist and welfarist ideologies.

Fortunately, the world as a whole has entered a post-modern phase of development. Colonial market systems and dependent relationships are a thing of the past. North-South relations are no longer confrontation oriented. With the collapse of command style economies, new relationships are being forged between the East and West.

In Sri Lanka certain features of such an emerging market economy are noteworthy. One is that it has drawn the poor, the deprived and the under-privileged into its dynamics. They will not be ignored or by-passed in such an economy. They will become part of its productive system. They will be part of the market which drives the productive system.

We call the process 'Janasaviya'. It draws on the creative energy of our people. We have developed a programme for it. We have set a time frame for it. We hope, thereby, to assist and accelerate the process.

You can imagine the changes this will bring about. For one thing, the dualist structuring of socio-economic reality will be cut through by it. We owe such structuring to the colonial impact on our economic life. For another, it will level off the inequalities of our social order. Opportunity will then be a ladder that stretches from bottom up.

Another feature of emerging market economies is their progressive integration with the global economy. A world production system exists today. It is driven by a world market for goods and services. We need to link up our individual production systems to the world wide system. We need to buy from it and sell to it. We will have

**to buy what we cannot efficiently produce. We will have to sell where we can effectively establish comparative advantage.**

To accelerate such integration we have in Sri Lanka liberalised trade. We are progressively freeing exchange control. Complete de-regulation is actively in our minds. We are encouraging foreign investment. We are pursuing an export-led growth strategy. The domestic production base will be modernised in the process.

A third feature is the trend towards regional co-operation. By its nature such co-operation flourishes best among market oriented economies. The more open these economies are the more there will be of regional co-operation. The more close and captive they are, the less there will be of regional trends. Fortunately, evidence has piled up on the failure of Third-World experiments with command model planning. Even large States with big population bases have not demonstrated success with captive market economies. In these circumstances the prospects of Regional Economic Co-operation are promising.

I have placed these thoughts before you for good reason. For one thing, the market economy is the right setting for the practice of the profession of Accountants. Command economies have no great use for Accountants as we know them. Partial market economies constrain the profession. For another, Accountants have a major role to play in the transformatory process I have spoken of. They have to adapt themselves to meet the several challenges of the process.

**One of the needs of poverty alleviation strategies in a market economy is the stimulation of micro-enterprises. These enterprises need to be guided by basic principles of accounting. They must know how to prepare a Balance Sheet and a Profit and Loss Statement. They must be aware of the needs of financial discipline. These micro-enterprises must have a company plan. These needs are no less critical for their size than for big corporate organisations.**

Unless such enterprises are inducted in accounting concepts their survival in a competitive environment is difficult. They would not be able to grow into small enterprises and from there onwards into medium enterprises. Upward mobility will be denied to them.

**The second challenge to the Accountancy profession is our need to integrate the national economy with the global economy. Clearly, at this end of the spectrum the profession's first duty is its own upgradation. Its professional standards cannot be less than international. Its ethical standards and decorum must be high. A code of conduct must be enforced by the profession. Negligence must not have tolerance.**

**The third challenge is regional co-operation. What can Accountants do to advance socio-economic development in the region through such co-operation? I trust your Seminar will provide some answers.**

Fortunately, the policy environment in our countries is undergoing rapid change. Many are moving towards more liberal, more open and more market oriented systems. This provides a positive environment for useful intervention by

Accountants in the resolution of the problem of poverty. I have tried to outline as to how Accountants can do this in Sri Lanka. Perhaps the various professional bodies of Accountants in our region could join in their efforts. Their backup will be crucial if we are to get the poor into the productive life of a viable commercial economy.

I have great pleasure now in inaugurating your Seminar. I wish the South Asian Federation of Accountants' Seminar every success.

I thank you.

ලේකම් කාර්යාලය
26 AUG 2023
පුස්තකාලය